


. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 26.07.2026 • மலர் 04 • இதழ்: 206 • ஞாயிறு • Edition : Nagercoil • 26.07.2026 • Vol : 04 • Issue : 206 • Page : 4 • Rs. 5/-

# மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா

## சிஜேபி கோரிக்கைகளை ஏற்றது மத்திய அரசு!





புதுடெல்லி: மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதையடுத்து, டெல்லியில் சிஜேபி போராட்டக்களத்தில் இளைஞர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

"டெல்லி ஜந்தர் மந்தரிலும், நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை தேசவிரோத சக்திகள் தங்கள் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவதை அனுமதிக்க மாட்டேன்; மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு எனது ராஜினாமாவை பிரதமருக்கு அனுப்பியுள்ளேன்" என்று தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

நீட் தேர்வு வினாத்தாள் கசிவுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட மூன்று கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான்பூச்சி ஜனதா கட்சி சார்பில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றன. இந்நிலையில், தர்மேந்திர பிரதான் தனது ராஜினமாவை அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சீர்திருத்தத்திற்காக நான் என்னை அர்ப்பணித்துள்ளேன். ஒரு வலிமையான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட கல்வி முறையே ஒரு வலிமையான தேசத்தின் அடித்தளம் என்று நான் எப்போதும் நம்பி வந்துள்ளேன்.

நாட்டின் இளைஞர்களின் விருப்பங்கள், உணர்வுகள் மற்றும் நியாயமான எதிர்பார்ப்புகளை நான் ஆழ்ந்து மதிக்கிறேன். இந்தியாவின் இளம் தலைமுறையின் கனவுகளை நனவாக்குவது, அரசியல் மற்றும் சமூக வாழ்வில் நம் அனைவரின் தார்மிகக் கடமையாக இருந்து வருகிறது. பிரதமரின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ் தேசத்துக்கு சேவை செய்ய எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்புக்காக எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மே 3, 2026 அன்று நடைபெற்ற நீட்யுஜி (NEETUG) தேர்வில் முறைகேடுகள் கண்டறியப்பட்டன. இதைக் கவனத்தில் கொண்டு உடனடியாக இந்திய அரசு, விசாரணையை சிபிஐயிடம் (CBI) ஒப்படைத்து, தேர்வை ரத்து செய்து, மறு அட்டவணையை வெளியிட்டது. அடுத்த ஆண்டு முதல் கணினி அடிப்படையிலான தேர்வு (CBT) முறையில் தேர்வை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் காலகட்டத்தில், 20 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான தேர்வு தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்வதே எங்கள் முன்னுரிமையாக இருந்தது. இந்த நோக்கத்துக்காக, இந்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், மாவட்ட நிர்வாகம் ஆகியவை முக்கியப் பங்காற்றின. மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் ஜூன் 21, 2026 அன்று தேர்வு நிறைவடைந்தது.

முதல் நாளிலிருந்தே இதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். இதில் இருந்து நான் ஒருபோதும் பின்வாங்கவில்லை. எந்தவொரு திறமையான மாணவரின் எதிர்காலமும் தேர்வு மாஃபியாவால் பாதிக்கப்படக் கூடாது என்றும், எந்தவொரு மாணவருக்கும் அநீதி இழைக்கப்படுவதை அனுமதிக்கக்கூடாது என்றும் நான் உறுதியாக இருந்தேன்.

ஜூலை 16 அன்று அறிவிக்கப்பட்ட நீட்யுஜி (NEETUG) தேர்வு முடிவுகள் திருப்திகரமாக இருந்தன. ஏழ்மையான பின்னணியைச் சேர்ந்த பல திறமையான மாணவர்கள் வெற்றி பெற்றனர்.

இருப்பினும், பொறுப்புள்ள பதவிகளில் இருந்த சில தனிநபர்கள், பல மாணவர்களைத் தவறாக வழிநடத்த முயன்றனர். இது எனக்கு மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியது.

நமது ஜனநாயகத்தின் சக்தியின் மீது எனக்கு எப்போதுமே அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. இளைஞர்களின் விருப்பங்கள், கனவுகள் மற்றும் எதிர்பார்ப்புகளை நான் ஆழ்ந்து மதிக்கிறேன். அவர்கள் இந்தியாவின் எதிர்காலம் மட்டுமல்ல, ஒரு புதிய; வளர்ச்சியடைந்த இந்தியாவின் சிற்பிகள்.

கடந்த 10 நாட்களில் நடந்த நிகழ்வுகளால் நான் வருத்தமடைகிறேன். இது எனக்கு தனிப்பட்ட கவுரவம் சம்பந்தப்பட்ட விஷயம் அல்ல.

இந்தியாவின் இளைஞர் சக்தியே இந்த நாட்டின் உண்மையான பலம்.

நாட்டின் இளைஞர்கள் மாயைகளின் தீய வட்டத்திற்குள் வீழ்வதை நான் அனுமதிக்க மாட்டேன், இதுவே எனது உறுதி.

ஜந்தர் மந்தரிலும் நாடு முழுவதிலும் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை தேசவிரோத சக்திகள் தங்கள் ஆதாயத்துக்காகப் பயன்படுத்துவதை நான் அனுமதிக்க மாட்டேன். நாட்டின் ஒற்றுமை பேணப்பட வேண்டும்.

இந்தியாவில் ஒரு மாணவரின் எதிர்காலம் கூட சட்டச் சிக்கல்களில் சிக்கக்கூடாது. நமது பிள்ளைகள் தங்கள் நேரத்தை படிப்பிற்கு அர்ப்பணித்து, தங்கள் தொழில் வாழ்க்கையை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். இதை மனதில் கொண்டு, எனது ராஜினாமாவை பிரதமருக்கு அனுப்பியுள்ளேன்.

பிரதமரின் வழிகாட்டுதலுக்கும், நம்பிக்கைக்கும், தொடர்ச்சியான ஆதரவிற்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சரவையில் உள்ள எனது மதிப்புக்குரிய சக ஊழியர்களுக்கும், அமைச்சகத்தின் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும், என்னுடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசத்துக்கு சேவை செய்வதே என் வாழ்வின் தலையாய முன்னுரிமை. நான் எப்போதும் அதற்கே என்னை அர்ப்பணித்துக் கொள்வேன்.

புரி ஜெகந்நாதரின் அருளால், இந்திய மக்களின், ஒடிசா மக்களின், நாட்டின் இளைஞர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக, என்னால் இயன்ற எல்லா வழிகளிலும் என்னை தொடர்ந்து அர்ப்பணித்துக் கொள்வேன்" என்று தர்மேந்திர பிர்தான் தெரிவித்துள்ளார்.

### அபிஜித் தீப்கே கூறியது என்ன?

தர்மேந்திர பிரதான் ராஜினாமாவை அடுத்து, டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். "இது அமைதிக்கும் பொறுமைக்கும் கிடைத்த வெற்றி. ஜென்ஸீ பட்டாளத்துக்கு வாழ்த்துகள்" என்று 26 நாட்கள் உண்ணாவிரதப் போராட்டம் இருந்த சமூக செயற்பாட்டாளர் சோனம் வாங்சுக் குறிப்பிட்டுள்ளார்.

தர்மேந்திர பிரதான் ராஜினாமாவை அடுத்து, டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்டோர் ஆரவாரத்துடன் அதனை வரவேற்றனர். ஒருவருக்கொருவர் தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டனர். இசை இசைத்தும், நடனமாடியும் அவர்கள் கொண்டாட்டத்தில் மூழ்கினர்.

தர்மேந்திர பிரதான் ராஜினாமா குறித்துப் பேசிய சிஜேபி நிறுவனர் அபிஜித் தீப்கே, "நாங்கள் சாதித்துவிட்டோம். தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்துவிட்டார். நீங்கள் அச்சப்படாவிட்டால், அரசின் முன்பாக தலை குனியாவிட்டால் எவரையும் ராஜினாமா செய்ய வைக்க முடியும் என்பது நிரூபணமாகி உள்ளது. இது மாணவர்களுக்கு கிடைத்த வெற்றி.

### டெல்லி போராட்டம் நிறைவு:

இந்நிலையில், மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஏற்பட்ட உடன்பாட்டுக்கு இணங்க, போராட்டத்தை வாபஸ் பெறுவதாக சிஜேபியின் தலைமை செய்தித் தொடர்பாளர் சவுரவ் தாஸ், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஜே.பி.நட்டா மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோருடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ஆசுதோஷ் ரங்கா, "நாங்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்தோம். தற்போது தர்மேந்திர பிரதான் பதவி விலகி உள்ளார். இதன் மூலம், எங்கள் முதல் கோரிக்கை நிறைவேறி உள்ளது. இழப்பீட்டைப் பொறுத்தவரை, நடைமுறையில் உள்ள விதிகளுக்கு உட்பட்டு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கவுரவமான இழப்பீடு வழங்கப்படும் என்று அரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

வழக்குகளை திரும்பப் பெறும் விவகாரத்தைப் பொறுத்தவரை, அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று அரசு உறுதியளித்துள்ளது. மூன்று முதல் நான்கு நாட்களில் முதல் தகவல் அறிக்கைகளின் நகல்களை பகிர்ந்து கொள்வதாக அமைச்சர்கள் கூறியுள்ளனர். இதை புரிந்துகொண்டு நாங்கள் அரசாங்கத்திடம் எழுத்துப்பூர்வமான உத்தரவாதத்தை அளித்துள்ளோம். தேர்வு சீர்திருத்தங்கள் தொடர்பாக நாங்கள் அளித்த ஐந்து அம்ச சீர்திருத்த யோசனைகள் தொடர்பாக நான்கு வாரங்களுக்குப் பிறகு நாங்கள் மீண்டும் அரசாங்கத்தைச் சந்திப்போம்" என தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து பேசிய சவுரவ் தாஸ், "ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் ஒப்புக்கொள்ளப்பட்ட காலக்கெடுவுக்குள் செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில், நல்லெண்ணத்தின் பேரில் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக சிஜேபி அறிவிக்கிறது" என தெரிவித்தார். இதன்மூலம், சுமார் ஒரு மாத காலமாக டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்று வரும் போராட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

## நாகர்கோவிலில் ரூ.76.50 லட்சத்தில் புதிய கட்டடங்கள் அமைச்சர் திறந்து வைத்தார்



நாகர்கோவில் ஜூலை 26

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட புதிய கட்டங்களைதிறக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆஸ்டின் (நாகர்கோவில்), முனைவர் தாரகை கத்பர்ட் (குளச்சல்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் கட்டிடங்களை திறந்து வைத்து தெரிவிக்கையில்:

நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட ஆளூர் அரசு தொடக்கப்பள்ளி வளாகத்தில், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.17.30 இலட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைப் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து பெருவிளை பகுதியில் அமைந்துள்ள பொதுமக்கள் மற்றும் இளைஞர்களின் அறிவுத் தேடலைப் பூர்த்தி செய்யும் வகையில் 6வது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.14.70 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்ட ஊர்புற நூலகம் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து அண்ணா பேருந்து நிலையம் அருகில் உள்ள தளவாய் நகர் பகுதியில், அப்பகுதி மக்களின் வசதிக்காகப் ரூ.14.50 இலட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள படிப்பகம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும் வடிவீஸ்வரம் பகுதியில், பொதுமக்களுக்குத் தரமான மருத்துவ வசதி தடையின்றிப் கிடைக்கும் பொருட்டுப் 6வது நிதிக்குழு மானியத்தின் கீழ் ரூ.30 இலட்சம் மதிப்பில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் மக்கள் பயன்பாட்டிற்காக திறந்துவைக்கப்பட்டது. சுகாதார நிலையத்தில் உள் நோயாளிகள் பிரிவு, வெளி நோயளிகள் பிரிவு, ஆய்வகம், மருந்தகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இதன் வாயிலாக நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வடிவீஸ்வரம் சுற்றியுள்ள பகுதியிலிருந்து வரும் நோயாளிகளுக்கு மேம்பட்ட மருத்துவ சேவையை வழங்க முடியும். இவ்வாறு அமைச்சர் கூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சிகளில் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) எம். மேரி பிரின்சி லதா, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர்.ஐஸ்வர்யா, மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ரகுராம், துறை அலுவலர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## "மாணவர்களிடம் பிரதமர் மோடி மன்னிப்பு கேட்க வேண்டும்" : ராகுல் காந்தி

புது டெல்லி: "போராட்டங்களைக் கையாண்ட விதம் குறித்து மாணவர்களிடம் பிரதமர் நரேந்திர மோடி மன்னிப்பு கேட்க வேண்டும்" என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.

டெல்லியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மாணவர்களைச் சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி, "இந்தியாவின் கல்வி அமைப்பு ஆர்எஸ்எஸ் அமைப்பால் எவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது என்பது குறித்து உண்ணாவிரதத்தில் இருந்த மாணவர்களுடன் நான் கலந்துரையாடினேன். மாணவர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைக்கிறார்கள், அவற்றை விட்டுக்கொடுக்கவே முடியாது. இதை நான் மட்டும் சொல்லவில்லை, இந்தியாவின் மாணவர்களே இதைச் சொல்கிறார்கள்.

முதல் கோரிக்கை என்னவென்றால், ஊழல்வாதியும், திறமையற்றவரும், பொறுப்பற்றவருமான கல்வி அமைச்சர் பதவி நீக்கப்பட வேண்டும். தர்மேந்திர பிரதானை கல்வித் துறையிலிருந்து வேறு துறைக்கு மாற்றுவதே தீர்வு என்று பிரதமர் மோடியின் அமைச்சரவையில் பேசப்படுகிறது. இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

தர்மேந்திர பிரதானை ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு மாற்றுவது பற்றிய பேச்சுக்கே இடமில்லை. அவர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும். நமது மாணவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் அடையாளமாக தர்மேந்திர பிரதான் இருக்கிறார்.

இரண்டாவது கோரிக்கையாக, நேற்று கண்ணில் சுடப்பட்ட ஓர் இளைஞரை நான் அறிமுகப்படுத்தினேன். மேலும், ஆயிரக்கணக்கான இளைஞர்களின் கால்கள் தடியடிக்கு உள்ளாகி உடைக்கப்பட்டுள்ளன. அவர்களின் உடல்களில் பெல்லட் குண்டுகள் தாக்கப்பட்டுள்ளன. இதற்குப்பொறுப்பானவர்கள், இதனைதிட்டமிட்டவர்கள் மற்றும் அதைச் செயல்படுத்தியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஒட்டுமொத்த அமைப்பின்தலைவரானபிரதமர்மோடி, மாணவர்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும். கல்வி அமைச்சரை நீக்குதல், போராட்டக்காரர்கள் மீது வன்முறையைப் பயன்படுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல் மற்றும் பிரதமர் மன்னிப்பு கோருதல் ஆகிய மாணவர்களின் மூன்று கோரிக்கைகளும்மிகத்தெளிவானவை, அவைகண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கூறினார்.

## 5 மாதங்களாக நீடிக்கும் போர் பதற்றம் ஈரான் மக்கள் கடும் அவதி

புதுடெல்லி ஜூலை 25

பிப்ரவரி 28ஆம் தேதி தொடங்கி தற்போது வரை கிட்டதட்ட 5 மாதங்களாக ஈரானில் போர் பதற்றம் நீடிக்கிறது. ஈரானிடம் அணு ஆயுதங்கள் இருப்பது ஆபத்து என கூறி தான் அமெரிக்காவும் இஸ்ரேலும் முதலில் தாக்குதலை தொடங்கின. ஆனால் தற்போது இது ஹார்முஸ் ஜலசந்தி விவகாரத்தில் வந்து நிற்கிறது. அமெரிக்கா, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டார். இத்துடன் ஈரானில் பெரிய ஆட்சி மாற்றம் வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் கமேனி மகன் மொஜ்தபா கமேனி தலைவரானார். இதனால் அமெரிக்கா தரப்புக்கு பெரும் அதிருப்தி, அதே வேளையில் ஈரானும் சம பலத்துடன்தாக்க தொடங்கியது. இந்த போர் ஜூன் மாதத்தில் சற்றே தணிந்த நிலையில் மீண்டும் இரண்டாம் கட்டமாக போர்

தீவிரமடைந்துள்ளது. அமைதி ஒப்பந்தத்தை மீறி இரு நாடுகளுமே பரஸ்பரம் தாக்குதல் நடத்துகின்றன. இதனால் கச்சா எண்ணெய்க்காக வளைகுடா நாடுகளை சார்ந்திருக்கும் இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதற்கிடையே தொடர்ந்து 13ஆவது நாளாக ஈரான் நாட்டின் பல்வேறு பகுதிகளை இலக்கு வைத்து அமெரிக்க ராணுவம் தீவிர ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ளது

அமெரிக்க ராணுவம் ஈரானின் வடக்கு முதல் தெற்கு வரையிலான முக்கிய ராணுவ கட்டமைப்புகள் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளது. கிலான் மாகாணத்தில் ஈரானிய புரட்சிகர காவல் படையின் கடற்படை தலைமையகம் மீது குறி வைத்துள்ளது. அதே போல பண்டார் அன்சாலி துறைமுக நகரிலும் அமெரிக்க குண்டுகள் வீசப்பட்டன. அமெரிக்காவின் இந்த அதிரடி தாக்குதலுக்கு ஈரானும் உடனடியாக பதிலடி கொடுத்துள்ளது. அரபு நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க ராணுவ தளங்களை இலக்கு வைத்து ஈரான் படைகள் ஏவுகணை தாக்குதல்களை நடத்தின. இதற்கிடையே அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், ஈரானின் மின் உற்பத்தி நிலையங்கள், பாலங்கள் மற்றும் முக்கிய அணுசக்தி தளங்கள் மீது தாக்குதலை விரிவுபடுத்த போவதாக எச்சரித்துள்ளார். அதே வேளையில்ராஜதந்திரமுறையிலான பேச்சுவார்த்தைக்கும் கதவுகள் திறந்தே இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார் இதற்கிடையே அமெரிக்கா ஈரான் இடையிலான அமைதி பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கான பாதையை பாகிஸ்தான் ஆராய்ந்து வருகிறது. ஈரானிய உள்துறை அமைச்சர் எஸ்கந்தர் மொமேனி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்திற்கு பயணம் மேற்கொண்டு ஆலோசனை நடத்தியுள்ளார்.



ஈரான் போரை பொறுத்தவரை இரு தரப்புமே விடாப்பிடியாக நிற்கின்றன. ஒரு நாள் சமாதானம் ஆனால் அடுத்த நாளே சண்டைக்கு செல்கின்றன. இதனால் தான் இருதரப்புக்கும் இடையே ஒரு உடன்பாடே எட்டாமல் இருக்கிறது. குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தியை யார் கட்டுப்படுத்துவது என்பதில் தான் போட்டியே நீடிக்கிறது. இதற்கு ஒரு முடிவு கிடைக்கும் வரை ஈரான் போர் முடிவில்லாமல்கன்னித்தீவுகதையை போல நீண்டு கொண்டு தான் இருக்கும்.

அமெரிக்காவை இந்த போருக்காக ஏற்கனவே நிறைய செலவு செய்துவிட்டது. இதனால் போர் நீடிப்பது டிரம்புக்கே கூட சிக்கலை ஏற்படுத்தும். அதுமட்டுமில்லாமல் எந்த நாடும் இந்த போரில் அமெரிக்காவுக்கு துணை நின்று தாக்குதல் நடத்த தயாராக இல்லை.

எனவே விரைவாக இதை முடிவுக்கு கொண்டு வருவது தான் உலக நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் நல்லது.



# மதுரையில் பிரிண்ட் அன் பேக்கேஜ் 2026 கண்காட்சி திறப்பு

மதுரை ஜூலை 25,

மதுரையில் PRINT N PACK 2026 துவக்க விழா வேலம்மாள் ஐடா ஸ்கட்டர் அரங்கில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக குமார் ஜெயந்த் I.A.S அவர்கள் குத்து விளக்கு ஏற்றி கண்காட்சியை துவக்கி வைத்தார். S. வாசுதேவன் TANSTIA , R.J. இரமேஷ் TIIC, விசிண்ட் மெனசேரி தேவசி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

# திருச்செந்தூர் கோயிலில் பிரம்மாண்ட நுழைவாயில்.!



தூத்துக்குடி, ஜூலை:26

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் பெருந்திட்ட வளாகப் பணிகளின்கீழ்அமைக்கப்பட்டுள்ளவண்ணமயமானபுதியநுழைவாயில், கோயிலுக்கு வரும் பக்தர்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில், கடந்த 2022ம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறை மற்றும் ஹெச்.சி.எல் (HCL) நிறுவனம் இணைந்து ரூ. 300 கோடி மதிப்பில் பெருந்திட்ட வளாகப் பணிகளைத் தொடங்கின.

இப்பணிகளை அன்றைய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்த நிலையில், தற்போது வரை சுமார் 90 சதவீதப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இப்பெருந்திட்ட வளாகப் பணிகளின் ஒரு பகுதியாக, கோயிலின் வடக்குப் பகுதி, சந்நிதித் தெரு வழி மற்றும் நாழிக்கிணறு செல்லும் பாதைகளில் எழில்மிகு வண்ணமயமான நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, கோயில் முகப்பிலும் புதிய நுழைவாயில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் திறக்கப்பட்டுள்ளது. இந்த நுழைவாயிலின் புதிய முகப்புத் தோற்றம் மற்றும் கலைநயத்தை ஆன்மீக அன்பர்களும் பக்தர்களும் பெரிதும் ரசித்துப் பாராட்டி வருகின்றனர்.

# குமரியில் இருந்து கேரளாவுக்கு கடத்திய ரேஷன் அரிசி

## மண்ணெண்ணெய் பறிமுதல்



மார்த்தாண்டம், ஜூலை. 26

கன்னியாகுமரி மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ எம் பாரதி தலைமையில் ஓட்டுனர் ஏ.ஒய். ஜாண் பிரைட் உள்ளிட்ட பறக்கும் படை குழுவினரால் கல்குளம் வட்டம் பகுதியில் பொது வினியோக திட்ட கடத்தல் தடுப்பு தீவிர ரோந்து பணியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

அப்போது சந்தேகத்திற்கு இடமாக வெள்ளிகோடு பகுதியில் என்ற இடத்தில் வந்து கொண்டு இருந்த கேரளாபதிவெண்கொண்ட சொகுசு கார் வேகமாக வந்தது . காரை நிறுத்தும் படி சைகை காட்டியும் நிர்க்காமல் சென்றதால், அதனை சுமார் 10 கிலோ மீட்டர் தூரத்தில் பின் தொடர்ந்து இரவிபுதூர் கடை என்ற இடத்தில் மடக்கி பிடித்தனர். அப்போது கார் ஓட்டுனர் தப்பி ஓடினார். தொடர்ந்துகாரைசோதனை செய்ததில் அதில் சுமார் 750 கிலோ பொது வினியோக திட்ட ரேஷன்அரிசி கேரளா மாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. கண்டு பிடித்த அரிசியை காப்புக்காடு அரசு கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது

இது போன்று அழகிய மண்டபம் பகுதியில்பொது வினியோக திட்ட கடத்தல் தடுப்பு ரோந்து பணியில் இருந்த போது ஆம்னி வேன் ஒன்றில் சந்தேகத்திற்கு இடமாக மண்ணெண்ணெய் வாசனையுடன் வந்து கொண்டு இருந்தது . அந்த வாகனத்தை சுமார் 2 கிலோமீட்டர்தூரம் விரட்டி காட்டாத்துறை என்ற இடத்தில் மடக்கி பிடித்தும் ஓட்டுனர் வாகனத்தை நிறுத்தி விட்டு தப்பி ஓட்டினார் .

சொகுசு காரை சோதனை செய்ததில் அதில் சுமார் 1,100 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் கேரளா மாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது.

கைப்பற்ற பட்ட வெள்ளை நிற மண்ணெண்ணெய் தூத்தூர் சின்னதுறை அரசு கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது. பிடிபட்ட சொகுசு கார்கள் இரண்டும் விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

# நாகர்கோவில் புத்தேரி சாலையில் கனரக லாரிகளை சிறை பிடித்து பொதுமக்கள் நள்ளிரவில் போராட்டம்!

## போலீசார் சமரசம்!!

நாகர்கோவில், ஜூலை.26

நாகர்கோவில் நகருக்குள் கனிம வளங்கள் மற்றும் சரக்கு லாரிகள் உள்ளிட்ட கனரக வாகனங்கள் நடமாட்டத்தால் அவ்வப்போது போக்குவரத்து நெரிசல் ஏற்படும். போக்குவரத்து நெரிசலைகட்டுப்படுத்தமாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக கனரக லாரிகள் அப்டா மார்க்கெட்டிலிருந்து புத்தேரி வழியாக திருப்பி விடப்பட்டு வருகின்றன. அந்த வழியாக அதிக அளவில் லாரிகள் திருப்பிவிடப்படுவதால் நாளுக்கு நாள் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

மேலும் குறுகலான சாலைகளில் இந்த கனரக லாரிகள் செல்லும்போது, தாழ்வாக செல்லும் மின் வயர்கள் மற்றும் கேபிள் மீது உரசி செல்வது வாடிக்கையாக உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இரட்டை அடுக்கு கண்டெய்னர் லாரிகள் அந்த வழியாக சென்றுள்ளன.

அப்போது வழியில் தாழ்வாக இருந்த மின்கம்பிகளில் லாரிகள் பலமாக உரசி சென்றன. இதனால் மின்கம்பிகள் அறுந்து மின்தடை ஏற்பட்டது. அப்போது மக்கள் வீடுகளை விட்டு வெளியே வந்தனர். மேலும் அவர்கள் ஒன்று திரண்டு அந்த வழியாக வந்த கனரக லாரிகளைசிறை பிடித்தனர். குடியிருப்பு பகுதியில் நிறைந்த சாலை வழியாக கண்டெய்னர் லாரி இயக்கக் கூடாது என்று அவர்கள் கோஷம் எழுப்பினர். திடீரென பொதுமக்கள் லாரிகளை சிறை பிடித்ததால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டதுடன் கடுமையான போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

தகவல் அறிந்ததும் வடசேரி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்ற போலீசார் நகருக்குள் லாரிகள் நுழைவது மற்றும் இயக்கப்படுவது தொடர்பாக உரிய கட்டுப்பாடுகள் தீவிர படுத்தப்படும் எனவும்,

மின்வாரியத்துடன் பேசி தாழ்வாக செல்லும் மின் வயர்களை சரி செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தனர். இதை ஏற்றுக் கொண்ட பொதுமக்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

இதனால் 2 மணி நேரம் அந்த பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

# நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி ஈரோட்டில் மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம்




ஈரோடு ஜூலை 26

மனிதநேய மக்கள் கட்சியின் சார்பில் ஈரோடு காந்தி சிலை அருகே மெழுகு வர்த்தி ஏந்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் சித்திக் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் கோவை சையது கலந்து ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும் மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திரா பிரதான் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.




# குமரகுரு வேளாண்மைக் கல்லூரி அருட்செல்வர் அரங்கம் திறப்பு விழா மற்றும் விருது வழங்கும் விழா

ஈரோடு ஜூலை 26

ஈரோடு ஆப்பகூடல் சக்திநகரில் உள்ள குமரகுரு வேளாண்மைக் கல்லூரி வளாகத்தில் குமரகுரு வேளாண்மை கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள அருட்செல்வர் அரங்கத்தின் திறப்பு விழா மற்றும் விருது வழங்கும் விழா நடைபெற்றது. இதில் தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் . விழாவிற்கு குமரகுரு கல்வி நிறுவனங்கள் தலைவர் டாக்டர் கிருஷ்ணராஜ் வாணவராயர் தலைமை வகித்தார் சக்தி சுகர்ஸ் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாணிக்கம், வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்வில் குமரகுரு கல்வி நிறுவனங்களின் தாளாளர் பாலசுப்ரமணியம் , சக்தி குழும அதிகாரிகள், அலுவலர்கள், குமரகுரு வேளாண்மைக் கல்லூரியின் முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் 250க்கும் மேற்பட்ட விவசாயிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவில் அருட்செல்வர் விருது, சி. சுப்பிரமணியம் விருது மற்றும் நம்மாழ்வார் விருது ஆகிய மூன்று விருதுகள் வழங்கப்பட்டது. மேலும், அதிக கரும்பு மகசூல் பெற்ற ஒன்பது கரும்பு விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

# தருமபுரியில் விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கினார்




தருமபுரி ஜூலை 26

தருமபுரியில் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கர விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பாரதிபுரம் பகுதியில் அவர் பக்தர்களுக்கு அருள் ஆசி வழங்கினார். அப்போது அவர் பேசியதாவது. தருமபுரி தர்மம் தலைத்த ஊர், தருமபுரியில் சிறந்த சிற்பக்கலை கொண்ட அற்புதமான கோவில்கள் உள்ளன. மனிதன் தோன்றிய போது தர்மம் தொடங்கி விட்டது. தர்மம் தேசத்திற்கு முக்கியமான விஷயம் ஆபத்துகளில் இருந்து நம்மை பாதுகாப்பது தர்மம் நாம் சுவிட்சமாகவும், சந்தோஷமாகவும் , திருப்தியாகவும், இணக்கமாகவும் வாழ தர்மம் அவசியம் மனித வாழ்க்கையில் இன்பம், நல்லொழுக்கம் ஏற்பட தர்மம் அவசியம் காஞ்சி காமாட்சி 32 தர்மங்களை காத்து அறம் வளர்த்த நாயகியாக காட்சி தருகிறார் . அன்பே சிவம் ஆசை இயற்கையானது ஆனால் அது முறையானதாக இருக்க வேண்டும். தர்மம், பக்தி ஆகியவை குழந்தை பருவத்தில் இருந்து வரவேண்டும்.

தருமபுரியில் சங்கடமடம் அமைக்க முயற்சி எடுத்துள்ளனர். இந்த முயற்சி சிறப்பாக நிறைவேறும் நல்ல குணம் நமக்கு நல்ல பழக்க வழக்கத்தை தருகிறது அனைத்து உயிர்களும் நன்றாக இருக்க வேண்டும். அனைவரையும் நேசிக்க வேண்டும் நற்செயல்களையும் , புண்ணியத்தையும் செய்ய வேண்டும். மனித மனம் கருணையுடன் இருக்க வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளிடம் ஆசி பெற்றனர்.



ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், எல்லை கிராமம் ஊராட்சி, இராமலிங்கபுரத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைக குறித்த புகைப்படக்கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

# நாகர்கோவிலில் பா ஜ பெண் கவுன்சிலர் உட்பட 3 வாகனங்களில் கண்ணாடிகள் உடைப்பு!

## போலீஸ் விசாரணை!!

நாகர்கோவில், ஜூலை. 26

நாகர்கோவில் வேப்பமூடு பூங்கா அருகே உள்ள கேப் ரோட்டில் கார் நிறுத்தும் பகுதி உள்ளது. இந்த பகுதியில் காரை பலரும் நிறுத்திவிட்டு செல்வது வழக்கம். நாகர்கோவில் மாநகராட்சியின் 24 வது வார்டு பாரதிய ஜனதா கவுன்சிலரும், கிழக்கு மண்டல மகளிர் அணி தலைவருமான ரோ சிட்டா திருமால் தனது காரை அங்கு நிறுத்தி இருந்தார். நேற்று முன்தினம் இரவு காரை நிறுத்தி சென்றவர், நேற்று காலை காரை எடுக்க வந்தார். அப்போது காரின் பின் பக்க கண்ணாடி உடைந்து காணப்பட்டது.

இதனை கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் காரை சுற்றிப் பார்த்தார். அப்போது காரின் முன் பகுதி கண்ணாடி உடைக்கப்பட்டிருந்தது. காரில் மாட்டியிருந்த பாரதிய ஜனதா கொடி சேதப்படுத்தப்பட்டு இருப்பது தெரிய வந்தது. இது குறித்த தகவல் அறிந்ததும் நாகர்கோவில் தொகுதி பொறுப்பாளர் தேவ் மற்றும் கவுன்சிலர் ரமேஷ், கிழக்கு மண்டல பொருளாளர் திருமால் மற்றும் பாரதிய ஜனதாவினர் அந்த பகுதியில்திரண்டனர்.இதனால் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் கோட்டாறு போலீசருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். இந்த நிலையில் அதே பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தமேலும் இரண்டு கார்களின் கண்ணாடி கல்வீசி உடைக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கார்களின் கண்ணாடி உடைக்கப்பட்ட சம்பவம்குறித்துஅப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை போலீசார் கைப்பற்றி தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கார் உடைக்கப்பட்டதா? அல்லது வேறு ஏதேனும் காரணமாக குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கே.ஆர்.பி. அணை நிலம் வழங்கியோர், 100 ஆண்டுகளாக வனநிலத்தில் விவசாயம் செய்பவர்களுக்கு பட்டா வழங்க வேண்டும்

## ஜூலை 28ல் ஓசூரில் போராட்டம் – இராமகவுண்டர்




கிருஷ்ணகிரி ஜூலை 26

கிருஷ்ணகிரி மாவட்டம் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கேகே, ஆர்.பிஅணை கட்ட நிலம் கொடுத்தவர்கள் மற்றும் வன நிலத்தில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும் என்பதை வழியூறுத்தி வருகின்ற 28ம் தேதி ஓசூர் வன கோட்டம் அலுவலகம் முன்பாக கவன ஈர்ப்பு ஆர்பாட்டம் நடத்தப் போவதாக தமிழக விவசாய சங்கத்தின் சார்பில் அறிக்கை வெளியிடப்பட்டு இருந்தது இதனை அடுத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வனத்துறை அதிகாரியுடன் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் இராம கவுண்டர் தலைமையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் பேச்சிவார்த்தையில் ஈடுப்பட்டனர். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த இராமகவுண்டர் கே.ஆர்.பி. அணை கட்ட நிலம் கொடுத்து சுமார் 70 ஆண்டுகள் ஆகிவிட்டன, இவர்கள் கிருஷ்ணகிரி, சூளகிரி என பல்வேறு வனப்பகுதியையொட்டி குடி அமர்த்தப்பட்டனர் ஆனால் இது வரை குடியிருப்பவர்களுக்கு அரசு பட்டா வழங்கவில்லை, இதே போல வனப்பகுதியில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்து விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கும் பட்ட வழங்கப்படவில்லை என்று வனத் துறை அதிகாரியிடம் எடுத்து கூறியதை அடுத்து , இது தொடர்பாக தமிழக முதல்வரிடம் தெரிவிப்பதாக கூறினார்கள். ஆனாலும் நாங்கள் அறிவித்துள்ளதின் படி வருகின்ற 28ம் தேதி ஓசூர் வன கோட்ட அலுவலகம் முன்பாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பட்டா வழங்க போராட்டம் நடத்தப்படும் இந்த போராட்டத்தின் வாயிலாக தமிழக முதல்வர் ஜோசப் விஜயாவது 100 ஆண்டுகளாக பட்டா இன்றிதவிக்கும்மக்களுக்கு பட்டாவழங்கநடவடிக்கை எடுப்பார் என நம்புவதாக தெரிவித்தார் மேலும் மேகதாது அணை விவாகரத்தில் கர்நாடகா முதல்வரை தமிழக முதல்வார் சந்திப்பதை அரசியல் ஆக்க வேண்டாம் என்பது என்னுடை கருத்து என்று குறிப்பிட்டார் இராம கவுண்டர் மாநில தலைவர்

# மார்த்தாண்டம் மேம்பாலத்தில் பைக் - மினி டெம்போ மோதல் தந்தை கண் எதிரே மகள் பலி

மார்த்தாண்டம், ஜூலை.26

களியக்காவிளையை அடுத்த பளுகல் பகுதியை சேர்ந்தவர் ராஜேந்திரன் (60). சமையல் வேலை செய்து வருகிறார். இவரது மகள் ராஜி (33). தந்தைக்கு சமையல் வேலைக்கு உதவி செய்து வந்து உள்ளார். இவர்கள் இருவரும் தக்கலையில் நடைபெற்ற சமையல் வேலைக்காக செல்ல இருசக்கர வாகனத்தில் மார்த்தாண்டம் மேம்பாலம் மேல் சென்று கொண்டிருந்தனர்.

அப்போது எதிரே வந்த மினி டெம்போ மோதி விபத்து ஏற்பட்டது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த மார்த்தாண்டம் போலீசார் மற்றும் பொது மக்கள் அவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்குதந்தைமகளை பரிசோதனை செய்த மருத்துவர்கள் ராஜி இறந்ததாக தெரிவித்தனர்.

தந்தை காயங்களோடு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். தந்தை கண் முன் மகள் பலியான சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



இது சம்மந்தமாக மார்த்தாண்டம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# நாகர்கோவிலில் இந்தியப் பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு சார்பில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம்

நாகர்கோவில், ஜூலை. 26

இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் சார்பில் ஐந்து அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய ஆட்ப்பாட்டம் நடைபெற்றது.

நாகர்கோவில் வேப்பமூடு சர். சி.பி. இராமசாமி நினைப் பூங்கா முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு தமிழ்நாடு அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஆசிரியர் அலுவலர் கூட்டமைப்பின் மாவட்டச் செயலாளரும் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளருமானடோமினி க் ராஜ் தலைமை தாங்கினார்.

தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்டத் தலைவர் பென்னட்ஜோஸ்தொடங்க உரையாற்றினார். தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் வேலவன், தமிழ்நாடு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்டத் தலைவர் டயாஸ், பதவி உயர்வு பெற்ற பட்டதாரி மற்றும் தமிழ ஆசிரியர் கழக பொதுச் செயலாளர் பெனின் தேவகுமார், தமிழ்நாடு இடைநிலை ஆசிரியர் கழகத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் எட்வின் பிரகாஷ், இந்துக் கல்லூரி முட்டா அமைப்பின் பொருளாளர் சுப்பையா,பணி நிறைவு பெற்ற பள்ளி, கல்லூரி ஆசிரியர் கழகத்தின் மாவட்டச் செயலாளர்அய்யப்பன் பிள்ளை ஆகியோர் கோரிக்கை விளக்க உரையாற்றினர்.

முதன்மைக் கோரிக்கைகளானகட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் 2009ன் பிரிவு 23(2)ல் பாராளுமன்றத்தில் உடனடியாகச் சட்டத் திருத்தம் செய்து, பணியில் உள்ள ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்விலிருந்து முழு விலக்களிக்க வேண்டும். சிறப்பு ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி மதிப்பெண்களைக் குறைப்பதோடு, பணி மூப்பு மற்றும் உயர்கல்விக்குக் கூடுதல் மதிப்பெண்கள் வழங்க வேண்டும்.

தேசிய கல்விக் கொள்கை மற்றும் நீட் தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

நீட் வினாத்தாள்கசிவு மற்றும் சி. பி. எஸ். சி. மதிப்பீட்டு முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று ஒன்றிய கல்வியமைச்சர் உடனடியாகப் பதவி விலக வேண்டும்.

பாராளுமன்றம் நோக்கிப் பேரணி சென்ற மாணவர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதலைக் கண்டிப்பது. உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உரையும், முழக்கமும் எழுப்பப்பட்டன.

இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் தேசிய செயற்குழு உறுப்பினர் சிவஶ்ரீ ரமேஷ் ஆர்ப்பாட்டத்தின் நிறைவுரையாற்றினார். தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாவட்டச்செயலாளர் ஷிபு நன்றி கூறினார். பல்வேறு ஆசிரியர் இயக்கங்களைச் சார்ந்த திரளான ஆசிரியர்கள்கலந்துகொண்டனர்.

# தக்கலை நீர்வளத்துறை அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்திற்கு வந்த விவசாயிகள்

## பேச்சுவார்த்தையால் சமரசம்

நாகர்கோவில், ஜூலை. 26

கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியல் நீர்வளத்துறை பகுதிக்குட்பட்ட பாசன கால்வாய்களை தூர்வாரி உடனடியாக தண்ணீர் விடு வேண்டும் என்பன உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திஇரணியல் கடைவரம்பு விவசாயிகள் சார்பில் தக்கலை நீர்வளத்துறை அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட போவதாக குமரி பாசனத்துறையினர் அறிவித்திருந்தனர்.



அதன்படி இரணியல் பாசன கால்வாய் தலைவர் ஜேசுதாஸ் தலைமையில், குமரி பாசனத்துறை தலைவர் வின்ஸ் ஆன்றோ முன்னிலையில் தக்கலை நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் காத்திருப்பு போராட்டம்' நடத்த திரளான விவசாயிகள் வந்தனர்.

இதில் பாசனத்துறை மாவட்டகுழு உறுப்பினர் முருகேசபிள்ளை, கால்வாய் தலைவர்கள் அருளானந்த ஜார்ஜ், ராஜ்குமார், ஜெனில்சிங், ஏசுதாஸ், முன்னாள் தலைவர் விஜயகுமார், உறுப்பினர்கள் டோனிபெலிக்ஸ், ஜஸ்டின் மற்றும் விவசாயிகள், விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அப்போது தக்கலை போலீஸார்பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ததுடன், பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்தனர். காத்திருப்பு போராட்டம் துவங்கியபோது நீர்வளத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை தொடங்கியது. நீர்வளத்துறை தக்கலை உதவி செயற்பொறியாளர் கதிரவன் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உதவி பொறியாளர். வினிஷா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

பேச்சுவார்த்தையில் தூர்வாரும் பணிகள், மற்றும் காங்கிரீட் வேலைகளை உடனடி முழுமையாக முடிக்கப்படும். அரசுக்கு இழப்புஏற்படுத்தி வரும் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுப்பது, அடைபட்டு கிடக்கும் மடைகள் சீரமைத்து தரப்படும். உள்ளிட்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதனை தொடர்ந்து காத்திருப்பு போராட்டம் சமரசமானது. அதே நேரம் வாக்குதிகளை அதிகாரிகள் மீறினால் அடுத்தகட்ட போராட்டங்களை உடனே முன்னெடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்டது.

# குமரி, தென்காசி தவிர்த்து இதர பகுதிகளில் வசிப்போருக்கு காணிக்காரன், காணிக்கர் சான்று உடனடி ரத்து

சென்னை: தமிழகத்தில் கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டத்தில் செங்கோட்டை மற்றும் அம்பாசமுத்திரம் ஆகிய பகுதிகளில் காணிக்காரன் அல்லது காணிக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்றனர்.

இந் நிலையில், சென்னை உட்பட இதர 10 மாவட்டங்களில் வசிக்கும் 954 பேருக்கு காணிக்காரன், காணிக்கர் என கடந்த காலங்களில் சாதி சான்றிதழ் வழங்கப்பட்டிருப்பது அரசின் கவனத்துக்கு வந்துள்ளது. இதையடுத்து அந்த சான்றிதழ் களை ரத்து செய்ய மாவட்ட நிர்வாகங்களுக்கு சமூக நீதித் துறை செயலர் நா. சுப்பையன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது: கன்னியாகுமரி மற்றும் தென் காசி மாவட்டம் செங்கோட்டை, அம்பாசமுத்திரம் தாலுகாவில் உள்ளவர்கள் மட்டும், தமிழகத்தின் பழங்குடியினர் பட்டியலில், காணிக்காரன் அல்லது காணிக்கர் இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எனவே, இப்பகுதிகளில் வசிப்பவர்களுக்கு மட்டுமே காணிக்காரன், காணிக்கர் சாதி சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். ஆனால், கடந்த 2018 ஜனவரி 1 முதல் 2026 மே 26ம் தேதி வரை, வருவாய் மேலாண்மை ஆணையரகம் வழியாக, தமிழ்நாடு மின்னாளுமை முகமை மூலம், சென்னையில் 40, செங்கல்பட்டு 152, காஞ்சிபுரம் 244, கடலூர் 197, கள்ளக்குறிச்சி 4, மதுரை 3, ராமநாதபுரம் 203, திருவாரூர் 30, வேலூர் 43, விழுப்புரம் 38 என 954 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

ஏற்கெனவே கடந்த 2005ம் ஆண்டு தமிழக அரசு வெளியிட்ட அரசாணையில், ஆதிதிராவிடர், பழங்குடியினர் சாதி சான்றிதழ் வழங்குவது தொடர்பான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு பழங்குடியினர் பட்டியலில், வரிசை எண். 7ல் காணிக்காரன் அல்லது காணிக்கர் சாதி சான்றிதழானது கன்னியாகுமரி மற்றும் தென்காசியில் செங்கோட்டை, அம்பா சமுத்திரம் தாலுகாக்களில் உள்ளவர்களைத் தவிர மற்ற மாவட்டங்களில் வசிப்பவர்களுக்கு இணையதளம் வழியாகவோ, நேரடியாகவோ முறைகேடாக வழங்கப்பட்டிருந்தால் உடனே ரத்து செய்து, அரசுக்கு தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பழங்குடியினருக்கு சாதி சான்று

தமிழகம் முழுவதும் சாதி சான்றிதழ் கோரி விண்ணப்பிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் எதிர்கொள்ளும் சிக்கல்களைக் களைந்து, விரைந்து சாதி சான்றிதழ் வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில், சமூகநீதித் துறை சார்பில் மாவட்ட ஆட்சியர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் வன்னியரசு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர்களுக்கு சமூகநீதித் துறை செயலர் சுப்பையா எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்கு சாதி சான்று வழங்குவது தொடர்பாக பல்வேறு வழிகாட்டுதல்களை ஒன்றிணைத்து கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

அதன் படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சாதி சான்று கோரி விண்ணப்பிக்கப்படும் மனுக்கள் மீது ஆதிதிராவிடர் இனத்தவருக்கு 2 நாட்களுக்குள் வட்டாட்சியராலும், பழங்குடியினத்தவருக்கு ஒரு வாரத்துக்குள் கோட்டாட்சியராலும் சாதி சான்று வழங்கப்பட வேண்டும்.

தாமதித்தால் நடவடிக்கை

ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் தீவிர விசாரணை மேற்கொண்டு 15 நாட்களுக்குள் அம்மனுக்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

காலம் தாழ்த்தியும், உரிய நடவடிக்கையும் எடுக்காமலிருக்கும் சான்றிதழ் வழங்கும் அலுவலர்கள் மீது துறைரீதியிலான நடவடிக்கை எடுக்க, அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள சான்றிதழ் வழங்கும் அலுவலர்களுக்கு உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# சிவசேனா கட்சியின் மாநில தலைவர் கார் கண்ணாடி உடைப்பு

## போலீஸ் வழக்கு

களியக்காவிளை, ஜூலை, 26

தமிழ்நாடு, சிவசேனா கட்சி தலைவர் கார் கண்ணாடி நள்ளிரவில் உடைத்த நபரை போலீசார் தேடி வருகின்றனர்

களியக்காவிளை அருகே ஐங்காமம், செறுகோடு பகுதியை சார்த்தவர் ரமேஷ் குமார் (45). இவர் தமிழ்நாடு சிவசேனா கட்சியின் மாநில தலைவராக உள்ளார். இவருக்கும் ஐங்காமம் கல்குளம் கரைபகுதியை சார்ந்த சுகுமாரன் மகன் ராஜேந்திரன் என்பவருக்கும் இடையே வாய் தகராறு ஏற்பட்டுள்ளது.. இந்த முன்விரோதம் காரணமாக ரமேஷ் குமார் காரை நள்ளிரவில் கல்லால் அடித்து கார் கண்ணாடியை சேதப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பாக ரமேஷ்குமார் களியக்காவிளை போலீசில் புகார் செய்துள்ளார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# "பா.ரஞ்சித் நம்பிக்கையையும் வெல்லும்படி வேலை செய்து காட்டுவோம்"

## அமைச்சர் ராஜ்மோகன்



"ஒருநாள் திரை இயக்குநர் பா.ரஞ்சித்தின் நம்பிக்கையையும் வெல்லும்படி வேலை செய்து காட்டுவோம்" என்று பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன் கூறினார்.

இது குறித்து செய்தியாளர்களிடம் இன்று அவர் கூறும்போது, "தமிழக பள்ளிகளில் புதிய பாடத்திட்டம் வெகு விரைவில் அமலுக்கு வரும். இது குழந்தை மைய கல்வியாக இருக்கும். இந்த பாடத்திட்டத்தில் பெண்ணுரிமை, மண்ணுரிமை, தமிழ் தமிழர் நலன், பெண்களை மதிப்பது, பெற்றோரை மதிப்பது,பாடப்புத்தகசுமையை குறைப்பது ஆகியவை அடங்கும். வெகு விரையில் தமிழகத்தின் மொத்த கல்வித் திட்டமும், குழந்தை மைய கல்வியாக மாறப் போகிறது.

நீட் ஒழிப்பே எங்கள் கொள்கை. கல்வியை மாநிலப்பட்டியலுக்குகொண்டு வருவதன் மூலமே இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியும். தமிழகத்தில் பல இடங்களில் நீட் தேர்வுக்கு ஆதரவாக போராடுகிறார்கள். அவர்களுக்கு எங்களின் முழுமையான ஆதரவு உண்டு. போராடும் இளைஞர்களை போலீஸார் அச்சுறுத்தக் கூடாது என அரசு சார்பில் அறிவுறுத்தியுள்ளோம்" என்றார்.

'தமிழக அமைச்சரவையில் 8 தலித் அமைச்சர்கள் இருந்தும், வன்னி அரசு தவிர மற்றவர்கள் யாரும் தலித் பிரச்சினைகளுக்கு பெரிதாக குரல் கொடுக்கவில்லை' என்ற இயக்குநர் பா.ரஞ்சித்தின் கருத்துக்கு பதிலளித்த அவர், "பதிலுக்கு பதில் சொன்னால் நன்றாக இருக்காது. நமக்குள் சண்டை போட்டால் நோக்கம் சிதைந்து போகும். ஒரு நாள் ரஞ்சித்தின் நம்பிக்கையையும் வெல்லும்படி வேலை செய்து காட்டுவது தான் இதற்கான பதில்" என்று கூறினார்.

# வருமானவரித் துறை அலுவலர்கள் நாட்டின் நிதி நிலைமையை காக்கும் காவலர்கள்

## புதுச்சேரி துணைநிலை ஆளுநர் பெருமிதம்

சென்னை: 'நாட்டின் நிதி நிலைமையைக் காக்கும் காவலர்கள் வருமானவரித் துறையினர்' என்று புதுச்சேரி துணைநிலை ஆளுநர் கைலாசநாதன் தெரிவித்தார். தமிழகம் மற்றும் புதுச்சேரி மண்டல வருமானவரித் துறை சார்பில் 167வது வருமானவரி தினவிழா சென்னை கலைவாணர் அரங்கத்தில் நேற்று நடந்தது.

இந்த விழாவில் புதுச்சேரி மாநில துணைநிலை ஆளுநர் கே.கைலாசநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, வருமான வரி அதிகாரிகளுக்கு விருது வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமானவரி முதன்மை தலைமை ஆணையர் சுனில் பாஜ்பாய், வருமான வரி தலைமை இயக்குநர் (புலனாய்வு பிரிவு) அருண் சி.பாரத் உள்ளிட்ட அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் பேசியதாவது: கடந்த 166 ஆண்டுகளில் இந்தத் துறை மிகப் பெரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. காலனித்துவ காலத்தில் வளங்களைச் சுரண்டுவதற்காகத் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, இன்று சுதந்திர இந்தியாவில் சமூக சமத்துவம் மற்றும் பொருளாதாரத் தன்னிறைவுக்கான இயந்திரமாக உருவெடுத்துள்ளது. 140 கோடி மக்களைக் கொண்ட ஒரு நாட்டை வல்லரசாக மாற்ற பெரும் மூலதன முதலீடு தேவை.

வரி வசூலில் சாதனை

நமது உள்நாட்டு வருவாய் வசூல் உலகளாவிய இலக்குகளுக்கு இணையாக இருக்க வேண்டும். 202526 நிதியாண்டில் நேரடி வரி வசூல் வரலாறு காணாத வகையில் ரூ.23 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இது மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் 56 சதவீதமாகும். இது வரிச் சுமையை உயர்த்திப் பெறாமல், வரி விகிதங்களை குறைத்து, விதிகளை எளிமையாக்கியதன் மூலம் கிடைத்துள்ளது.

நீங்கள் வெறும் வரி வசூல் செய்பவர்கள் அல்ல; நாட்டின் நிதி நிலையைப் பாதுகாக்கும் காவலர்கள். நீங்கள் வசூலிக்கும் ஒவ்வொரு ரூபாயும் ஒருஏழைக் குழந்தையின் கல்விக்கோ, நோயாளியின் சிகிச்சைக்கோ அல்லது நாட்டின் மேம்பாட்டுக்கோ பயன்படுகிறது.

இந்தியாவின் வளர்ச்சியில் நீங்கள் அமைதிச் சிற்பிகளாக திகழ்கிறீர்கள். இவ்வாறு அவர் கூறினார். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வருமானவரி முதன்மை தலைமை ஆணையர் சுனில் பாஜ்பாய் பேசும்போது, "கடந்த 202324 நிதியாண்டில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலம் வரிவசூலில் மிகச்சிறந்த செயல்திறனை வெளிப்படுத்தி உள்ளது.

அதன்படி, ரூ.1,29,200 கோடி வரி வசூல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், இலக்கைத்தாண்டி ரூ.1,41,546 கோடி நிகர வரி வசூல் செய்யப்பட்டு சாதனை படைக்கப்பட்டுள்ளது.

இது முந்தைய ஆண்டைவிட 14.2 சதவீத வளர்ச்சியாகும். குறிப்பாக, கார்ப்பரேட் வரி வசூல் 28.83 சதவீதவளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. மொத்த வரி வசூல் ரூ.1.68 லட்சம் கோடியைத் தாண்டியுள்ளது'' என்றார்.

# கோவையில் மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை முறைகள் குறித்த தேசிய மருத்துவ கருத்தரங்கம் துவக்கம்




கோவை ஜூலை:26

கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில், சி.ஏ.பி.ஐ. 2026(மேம்பட்டநுரையீரல் தலையீட்டு சிகிச்சை கருத்தரங்கம்) என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசிய மருத்துவ கருத்தரங்கம் துவங்கியது.

கருத்தரங்கின் துவக்க விழா, மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை நிபுணர்களான டாக்டர் பட்டாபி ராமன், டாக்டர் அர்ஜூன் மற்றும் டாக்டர் மகாதேவன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில்ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாதேஸ்வரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கருத்தரங்கைத் தொடங்கி வைத்தார். இரண்டு நாட்கள் நடைபெறும் இந்தகருத்தரங்கில்,தமிழகம் மற்றும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நுரையீரல் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் பங்கேற்று, நுரையீரல் மற்றும் ப்ளூரா தொடர்பான நவீன சிகிச்சை முறைகள்,புதிய மருத்துவ தொழில்நுட்பங்கள், சவாலான நோய்களுக்கான தலையீட்டு சிகிச்சைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விளக்கவுரையாற்றி வருகின்றனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மாதேஸ்வரன்இது போன்ற மருத்துவ கருத்தரங்குகள் இளம்தலைமுறை மருத்துவர்களுக்கு சமீபத்திய மருத்துவ முன்னேற்றங்களையும், மேம்பட்ட நுரையீரல் தலையீட்டு சிகிச்சை முறைகளையும் அறிந்து கொள்ள சிறந்த வாய்ப்பாக அமையும் என்றார்.மேலும் தற்போது சுற்றுச்சூழல் மாசுபாடு அதிகரித்து வருவதால் நுரையீரல் தொடர்பான நோய்களின் பாதிப்பும் அதிகரித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர்,காற்று மாசுபாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல,ஒவ்வொரு தனிமனிதரின்சமூகப்பொறுப்பும் ஆகும் என வலியுறுத்தினார்.

துவக்க விழாவில் ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் பரந்தாமன் சேதுபதி தலைமை செயல்பாட்டு அலுவலர் (சி.ஓ.ஓ.) மணி செந்தில் குமார்,மூத்த பொது மேலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி சென்னையில் அண்ணாமலை ஆக.16ல் நடைபயணம்



சென்னை:சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி, சென்னையில் 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் தலைவர் அண்ணாமலை தலைமையில் ஆக.16ம் தேதி பிரம்மாண்ட நடைபயணம் நடைபெற உள்ளது.

பாஜகவில் இருந்து விலகிய முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை, 'வீ த லீடர்ஸ்' என்ற அமைப்பைத் தொடங்கினார். இந்த அமைப்பில் இதுவரை 19.32 லட்சம் பேர் இணைந்துள்ளனர். பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சிறப்பு முகாம் அமைக்கப்பட்டு, உறுப்பினர் சேர்க்கை தீவிரமாக நடந்து வருகிறது.

உள்ளாட்சித் தேர்தலில் இந்த இயக்கம் நேரடியாகக் களமிறங்கும் என்று அண்ணாமலை ஏற்கெனவே அறிவித்திருந்தார். இதற்காக கோவையில் பிரத்யேக பயிற்சி மையம் தொடங்கப்பட்டு, வேட்பாளர்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தேர்தலுக்கு முன்னதாக மக்களுடன் நேரடியாக தொடர்பில் இருக்கவும், அவர்களது அன்றாடப் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்து ஆதரவைத் திரட்டவும் அண்ணாமலை திட்டமிட்டுள்ளார். இதன் ஒரு பகுதியாக, பொள்ளாச்சியில் கடந்த 12ம் தேதி நடைபெற்ற போதைப் பொருள் ஒழிப்பு மாநாட்டில் உரையாற்றினார்.

இந்நிலையில், அடுத்த மாதம் முழுவதும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுக்க 'வீ த லீடர்ஸ்' அமைப்பு முடிவு செய்துள்ளது. இதன் தொடக்கமாக, ஆக.2ம் தேதி கன்னியாகுமரியில் தூய்மைப் பணியை அண்ணாமலை தொடங்கி வைக்கிறார்.

தொடர்ந்து, ஆக.16ம் தேதி சென்னையில் பிரம்மாண்ட நடைபயணம் மேற்கொள்கிறார். எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே இந்த நிகழ்ச்சியை நடத்த காவல் துறை அனுமதி அளித்துள்ளதாக தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகளை 'வீ த லீடர்ஸ்' அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து திரளான நிர்வாகிகள் பங்கேற்க உள்ளனர். இது குறித்து அமைப்பின் நிர்வாகி ஒருவர் கூறும்போது, "உள்ளாட்சித் தேர்தலில் களமிறங்குவதற்கு முன்பு, மக்களின் ஆதரவைப் பெறுவதே எங்களின் முதன்மை இலக்கு. அதற்காகவே மக்கள் சார்ந்த பிரச்சினைகளை கையில் எடுத்து வருகிறோம்.

உறுப்பினர் எண்ணிக்கை 50 லட்சத்தை தொட்டவுடன், இது முழுமையான அரசியல் கட்சியாக மாறும் என்று அண்ணாமலை ஏற்கெனவே தெளிவுபடுத்தியுள்ளார்.

ஒருவேளை, உள்ளாட்சித் தேர்தலுக்குள் அந்த இலக்கை எட்ட முடியாவிட்டால், 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் பெயரிலேயே தேர்தலைச்சந்திப்போம். அடுத்த 6 மாதங்களுக்குள் இது குறித்த அதிகாரப் பூர்வ அறிவிப்பு வெளியாகும்'' என்றார்.

# குமரியில் ரூ.6.73 கோடியில் நல உதவிகள் 2306 பேருக்கு அமைச்சர் வழங்கினார்




நாகர்கோவில், ஜூலை. 26

கன்னியாகுமரி மாவட்ட பல்வேறுதுறைகளின்சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நேற்று 25. ம் தேதி நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆஸ்டின் (நாகர்கோவில்), தளவாய் சுந்தரம் (கன்னியாகுமரி), செல்லசாமி (பத்மநாபபுரம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந் நி க ழ் ச் சி யி ல் சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி பே சு கை யி ல் :

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதனடிப்படையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் 864 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. கு ம ரி மாவட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் பல ஆண்டுகளாக பட்டா கிடைக்காமல் இருந்தவர்களுக்கு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் 106 பயனாளிகளுக்கு இலவசவீட்டுமனைபட்டாக்களும், சிங்காரவேலர் திட்டத்தின் கீழ் 91 மீனவர்களுக்கும் வீட்டுமனை பட்டாக்களும், சமூக நீதித்துறை சார்பில் 92 பேருக்கு இபட்டாக்களும் வழங்கப்பட்டுள்ளது. ஆரோக்கியபுரம் முதல் நீரோடி வரை உள்ள 48 மீனவர் கிராமங்களில் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் கடல் சீற்றத்தால் பாதிப்பு ஏற்படுவது வழக்கம். அதில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிங்காரவேலன் குடியிருப்புத் திட்டத்தின் கீழ் பட்டா கிடைக்காத மீனவர்களுக்குப் பட்டா வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமூக நலத்துறை சார்பில் 482 மகளிருக்கு விலையில்லாத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 671 பேருக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. தகுதியான பயனாளிகள் முதலமைச்சரின் பெண்குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தில் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன். இன்றைய தினம் 2306 பயனாளிகளுக்கு ரூ.6.73 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்திலும் அனைத்துத் திட்டங்களும் அடித்தட்டு மக்களுக்கும் சென்றடைய துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

அதனைத்தொடர்ந்து தமிழ்நாடு தினத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுதொகை வழங்கப் பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் மு.வேலுமணி, நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆர்.ஐஸ்வர்யா, நாகர்கோவில் மாநகராட்சி மேயர் (பொ) எம்.மேரி பிரின்சி லதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது எஸ்.காளீஸ்வரி, துறை சார்ந்த அலுவலர்கள், பொது ம க் க ள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தின் வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய் மற்றும் பிரிவு கால்வாய்களில் 8,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்வகையில் 120நாட்களுக்கு முதல்போகவிவசாய பாசனத்திற்காகதண்ணீரை மாவட்டஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார்சட்டமன்றஉறுப்பினர்கள்.பா.பாலகிருஷ்ணா ரெட்டி.ஓசூர், .பி.எஸ். சீனிவாசன்.வேப்பனஹள்ளி. ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி நீர்வளத்துறை செயற்பொறியாளர் .செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர் .மோகன்ராஜ் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# சாலைகள் சாகசத்துக்கு அல்ல; பயணத்துக்கே: மாணவர்களுக்கு காவல் ஆணையர் அமல்ராஜ் அறிவுரை

சென்னை: சாலைகள் சாகசத்துக்கு அல்ல, பாதுகாப்பான பயணத்துக்கே என காவல் ஆணையர் அமல்ராஜ் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். சென்னையில் வாகனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், சாலைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சென்னை பெருநகர போக்குவரத்து காவல்துறை சார்பில் பிராட்வே ராஜா அண்ணா மலை மன்றத்தில் நேற்று விழிப் புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.




இதில் காவல் ஆணையர் அமல்ராஜ் கலந்துகொண்டு, விபத்தின்போது பொன்னான நேரத்தில் (Golden Hour) காயமடைந்தவர்களை மீட்டு உயிர் காப்பாற்றிய காவலர்கள், ஆம்புலன்ஸ் டிரைவர்கள், செவிலியர்கள், ஆட்டோ டிரைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

பின்னர் அவர் பேசியதாவது: விபத்துகளை குறைக்க காவல்துறை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதனால் விபத்துகள் குறைந்துள்ளன. என்றாலும், அவற்றை முழுமையாகத் தடுக்க விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

18 வயதுக்கு குறைவான சிறுவர்களை பைக் உள்ளிட்ட வாகனங்கள் ஓட்ட பெற்றோர்கள் அனுமதிக்கக் கூடாது. அதையும் மீறி ஓட்டி விபத்து ஏற்பட்டால் வழக்கில் சிறுவர்களுக்கு வாகனத்தை வழங்கிய பெற்றோர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு ஜனவரி 1 முதல் சென்னையில் 2,206 சாலை விபத்துகள் பதிவாகி, 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததுடன், 280 பேர் உயிரிழந்துள்ளனர். சாலைகள் சாகசம் செய்வதற்கான இடமல்ல, பாதுகாப்பாக பயணிக்க வேண்டிய வழித்தடம் என்பதை மாணவர்கள்உட்பட அனைவரும் உணர வேண்டும்.

பைக்கை ஓட்டிச் செல்வோரும், பின்னால் அமருபவரும் கட்டாயம் தலைக் கவசம் அணிய வேண்டும். விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடியாக உதவி செய்து போலீஸாருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு காவல் ஆணையர் அமல்ராஜ் பேசினார்.

நிகழ்ச்சியில் சாலைப் பாதுகாப்பு குறித்த கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. `நீயா நானா' கோபி நாத் விழிப்புணர்வு உரையாற்றினார். பள்ளி மாணவர்களுக்கு தலைக்கவசங்கள் வழங்கப்பட்டதுடன், இறுதியில் `சாலை விதிகளை மதிப்போம்' என்ற உறுதிமொழியை 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் காவல் துறையினர் ஏற்றனர். நிகழ்ச்சியில் போக்குவரத்து கூடுதல் காவல் ஆணையர் சாமுண்டீஸ்வரி, இணை ஆணையர் பகலவன், துணை ஆணையர்கள் பாலாஜி, மேகலீனா ஐடன், முத்துக்குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஐபோனுக்கு பதில் எண்ணெய் டெலிவரி

## வாடிக்கையாளருக்கு ரூ.1.8 லட்சம் நஷ்டஈடு

மும்பை: மும்பை பொவாய் பகுதியைச் சேர்ந்த நபர், கடந்த 2023ம் ஆண்டு ஏப்ரல் 22 அன்று பிளிப்கார்ட் தளத்தில் வட்டி இல்லா மாதத் தவணை முறையில் ரூ.1,11,793 மதிப்பில் 'ஆப்பிள் ஐபோன் 14 புரோ' போன் ஆர்டர் செய்தார்.

ஆனால், பார்சலில் ஐபோனுக்குப் பதிலாக 'தாடி வளர்க்கும் எண்ணெய்' இருந்தது. அதிர்ச்சியடைந்த வாடிக்கையாளருக்கு பிளிப்கார்ட் நிறுவனம் சரியான தீர்வு வழங்கவில்லை.

இதையடுத்து அவர் மும்பை புறநகர் கூடுதல் நுகர்வோர் குறைதீர்ஆணையத்தில்பிளிப்கார்ட்,அதன்விற்பனையாளர் 'இன்டர்நேஷனல் வேல்யூ ரீடெய்ல்' மற்றும் 'ஆப்பிள் இந்தியா' ஆகிய நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தார். வழக்கை விசாரித்த நுகர்வோர் ஆணையம், "இந்த இழப்புக்கு பிளிப்கார்ட்டும், அதன் விற்பனையாளருமே கூட்டுப் பொறுப்பு.

வாடிக்கையாளருக்கு அசல் தொகை ரூ.1,11,793ஐ 2023 ஏப்ரல் 22 முதல் 9 சதவீத வட்டியுடன் திரும்ப வழங்க வேண்டும். மன உளைச்சல், வழக்குச் செலவு உட்பட மொத்தம் ₹1.8 லட்சம் வரை 45 நாட்களுக்குள் வழங்க வேண்டும்" உத்தரவிட்டுள்ளது

# தாம்பரம் - தென்காசி இடையே சிறப்பு அதிவிரைவு ரயில்



சென்னை: வியாழன் மற்றும் சனிக் கிழமைகளில் தாம்பரம் தென்காசி இடையே சிறப்பு ரயில் இயக்கப்படுகிறது.

இது குறித்து தெற்கு ரயில்வே வெளியிட்ட அறிக்கை: கூட்ட நெரிசலை குறைக்க தாம்பரம் தென்காசி இடையே வாரம் இருமுறை வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் அதி விரைவு சிறப்பு ரயில் இயக்கப்படும். தாம்பரத்தில் இருந்து தென்காசிக்கு (ரயில் எண். 06135) ஜூலை 30, ஆக. 1, 6, 8, 13, 15 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப் படும்.

தாம்பரத்தில் இருந்து அதிகாலை 5 மணிக்கு புறப்படும் ரயில், மாலை 3.30 மணிக்கு தென்காசி சென்றடையும்,

இந்த ரயில் செங்கல்பட்டு, விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், சிவகாசி, ராஜபாளையம், சங்கரன்கோவில் ஆகிய நிலையங்களில் நின்று செல்லும்.

மறு மார்க்கமாக தென்காசியில் இருந்து தாம்பரத்துக்கு (ரயில் எண். 06136) ஜூலை 31, ஆக. 2, 7, 9, 14, 16 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படும். இந்த ரயில், தென் காசியில் இருந்து அதி காலை 5 மணிக்கு புறப்பட்டு மாலை 3.15 மணிக்கு தாம்பரம் வந்தடையும். சிறப்பு ரயிலில் இரண்டு 3ம் வகுப்பு ஏசி பெட்டிகள், ஒரு ஏசி இருக்கை வசதிகொண்ட பெட்டி, 14 இருக்கைவசதி கொண்ட பெட்டிகள், 4 இரண்டாம்வகுப்புசாதாரன பெட்டிகள் இடம் பெற்றிருக்கும்.

இந்த ரயில்களுக்கு முன்பதிவு நடைபெற்று வருகிறது.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் மாநகராட்சி, மூக்காண்டபப்பள்ளி, ஹோட்டல் ஹில்ஸ் கன்வர்சன் ஹாலில், கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்கம்இணைந்துநடத்தும்15வதுஓசூர்புத்தகத்திருவிழாவில்மாவட்டஆட்சித்தலைவர் . ச .தினேஷ் குமார் , சட்டமன்ற உறுப்பினர்கள் .பா.முகுந்தன் கிருஷ்ணகிரி, .இ.சி.கோவிந்தராசன் பர்கூர் ஆகியோர் முன்னிலையில் ஒரே நேரத்தில் செலவு செய்து அதிகமாக புத்தகம் வாங்க முடியாத நிலையிலுள்ளவர்களுக்கு புத்தக சேமிப்புத் திட்டம் மூ லம் 400 நபர்கள் மாதாமாதம் ரூ.600 செலுத்தி புத்தகச் சேமிப்புத் திட்டத்தில் இணைந்து ரூ.6 இலட்சம் மதிப்பில் புத்தகங்களை பெற உள்ளதற்கான ரசீதை மாவட்ட மு தன்மை கல்வி அலுவலர் .மதன்குமார் அவர்களிடம் வழங்கினார். உடன், ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி. ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் .முகம்மது ஷபீர் ஆலம், உதவி ஆட்சியர்பயிற்சி.சாய்சைதன்யாஜாதவ், , ஓசூர்புத்தகத்திருவிழாஒருங்கிணைப்பாளர்கள் .சேதுராமன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நில நிர்வாக ஆணையராக ராஜேஷ் லக்கானி நியமனம்



சென்னை: மத்திய அரசுப் பணியில் இருந்து திரும்பிய ராஜேஷ் லக்கானி, நில நிர்வாக ஆணையராக நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தை பூர்வீகமாகக் கொண்ட 1992ம் ஆண்டு தமிழகப் பிரிவு ஐஏஎஸ் அதிகாரியான ராஜேஷ் லக்கானி, தமிழக அரசில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றினார்.

இதற்கிடையே கடந்த 2025ம் ஆண்டு மத்திய அரசுப் பணிக்கு மாற்றப்பட்டு, நவோதயா வித்யாலயா சமிதியின் ஆணையராக நியமிக்கப்பட்டு பணியாற்றி வந்தார். இணைச்செயலர் அந்தஸ்திலான அந்த பணியில் அவர் ஓய்வுபெறும் 2029ம் ஆண்டுவரை நியமிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் தற்போது தமிழக அரசுப் பணிக்கு திரும்பியுள்ளார்.

ராஜேஷ் லக்கானி தமிழக அரசுப் பணிக்கு திரும்புவதை தொடர்ந்து, அவருக்கு நில நிர்வாக ஆணையர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. ஓராண்டு அல்லது தேவைப்படும் வரையில் கூடுதல் தலைமைச்செயலர் அந்தஸ்தில் நில நிர்வாக ஆணையர் பதவி தற்காலிகமாக உருவாக்கப்பட்டு அதில் நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமைச்செயலராக உள்ள சாய்குமாருக்கு அடுத்தாண்டு பிப்ரவரி மாதம் வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், ராஜேஷ் லக்கானியின் வருகை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

பேரிடர் மேலாண்மை ஆணையர்

இதே போல், தமிழகத்தில் கூடுதல் தலைமைத் தேர்தல்அதிகாரியாகப்பணியாற்றிவந்தஏ.சிவஞானம், தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையராக பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். தற்போது அவர் நியமிக்கப்பட்டுள்ள பேரிடர் மேலாண்மை ஆணையர் பணியிடம் ஓராண்டு காலம் அல்லது தேவைப்படும் வரை தற்காலிகமாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பதவி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் பதவிக்கு இணையானது என்று தமிழகதலைமைச்செயலர்எம்.சாய்குமார்வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# "பெண்கள் பாதுகாப்பை வலுப்படுத்தும் 'சிங்கப்பெண்' சிறப்பு அதிரடிப்படை

## முதலமைச்சருக்கு திருப்பூர் மாணவியர்கள், பொதுமக்கள் நெஞ்சார்ந்த நன்றி"

திருப்பூர்: ஜூலை 26 தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படை "மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 09.06.2026 அன்று சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாட்டில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையைத் தொடங்கி வைக்கும் விதமாக, சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் இலச்சினையை வெளியிட்டு அதற்கென வடிவமைக்கப்பட்ட வாகனத்தையும் அறிமுகப்படுத்தினார். சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குகிறது. சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் குற்றச் சம்பவங்கள் நிகழ் வாய்ப்புள்ள பகுதிகளைக் கண்டறிந்து கண்காணித்தல், பொது இடங்களில் கண்காணிப்பை மேம்படுத்தி சுற்றுக்காவல் பணிகள் மேற்கொண்டு, குற்றச்சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து பொது இடங்களில் பெண்களுக்குப் பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குதல், பேருந்து நிறுத்தங்கள், இரயில் நிலையங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பெண்கள் பணியாற்றும் தனியார் நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிக அளவில் செல்லக்கூடிய மற்றும் நெருக்கடி மிகுந்த பகுதிகளில், காவல்துறையின் இருப்பை அதிக அளவில் வெளிப்படுத்தி சட்டவிரோத செயல்களைத் தடுத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பான சூழலை உருவாக்கும் நோக்கில், அணுகுவதற்குக் கடினமான மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் திறம்படக் கண்காணிப்பதற்கு ரோந்துப் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, கல்வி நிறுவனங்கள், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட முகமைகளுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், பொதுமக்கள் பங்களிப்புடன், பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் பணிகளையும் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொள்வர். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீதான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சமரசமற்ற கொள்கையை உறுதி செய்வதற்காக சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி, திருப்பூர் மாவட்டத்தில், மாநகர காவல் துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 04 குழுக்களாகவும், மாவட்ட காவல்துறை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 02 குழுக்களாகவும் என மொத்தம் 06 சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைகள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் மாவட்டம் முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். ஒரு சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையில், 01 பெண்காவல் உதவி ஆய்வாளர் தலைமையில் 02 பெண் காவலர்கள் மற்றும் 01 ஓட்டுநர் காவலர் என மொத்தம் 04 காவலர்கள் தனி காவல் வாகனத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மேற்படி சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படைப் படையினர் திருப்பூர் மாநகர காவல்துறை எல்லைகளிலுள்ள கல்லூரிகள், பள்ளிகள், பேருந்து நிலையங்கள்/நிறுத்தங்கள், குற்றங்கள் நடைபெற வாய்ப்புள்ள பகுதிகள் போன்ற இடங்களில் ரோந்துபணி மேற்கொண்டு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களிலிருந்து பொது மக்களை பாதுகாக்கும் பணியினை மேற்கொள்வதோடு காவல் உதவி செயலி காவல் கட்டுப்பாட்டு அறை உதவி எண். பெண்கள் பாதுகாப்பு உதவி எண், குழந்தைகள் பாதுகாப்பு உதவி எண் ஆகியவை மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்கள்.




திருப்பூர் மாவட்டம் சிங்கபெண் சிறப்பு அதிரடிப்படையில் பணியாற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் தெரிவிக்கும்போது

திருப்பூர் மாவட்டத்திற்கு சிங்க பெண் சிறப்பு அதிரடிப்படையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறோம். எங்களுடன் 2 பெண் காவலர்கள் மற்றும் 1 வாகன ஓட்டுநர்கள் தலைமையில் பெண்கள் பாதுகாப்பு குறித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து இடங்களுக்குச் சென்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். காலை 7 மணி முதல் மதியம் 2 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் இரவு 12 மணி வரை இரண்டு சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றனர். சிங்க பெண் சிறப்பு அதிரடி படை திட்டம் பொதுமக்கள் மற்றும் பெண்களிடையே மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது. மேலும் எங்களது சிங்கப்பெண் படையினர் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களுக்கு சென்று பெண்கள் குழந்தைகள் பாதுகாப்பு குறித்து பெண்களிடையே விழிப்புணர்வு செய்து வருகிறோம். பெண்கள் எந்த பிரச்சனை வந்தாலும் தைரியமாக எதிர்கொள்ள வேண்டும். எந்த பிரச்சனையாக இருந்தாலும் தங்களிடம் தைரியத்துடன் எடுத்துச் சொல்ல வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் இணைய வழி மோசடிகள், சமூக வலைத்தளங்களில் பாதுகாப்பான பயன்பாடு அவசர கால உதவி எண்கள் (1091) காவல்துறையின் பாதுகாப்பு சேவைகள் வாயிலாக விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகிறோம். இத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளில் பயிலும் மாணவியர்கள் மற்றும் பெண் பேருந்து பயணியர்கள் தெரிவித்ததாவது, திருப்பூர் மாவட்டத்தில் பணிக்கு செல்லும் பெண்கள் மற்றும் பள்ளிகள், கல்லூரிகளுக்கு செல்லும் பெண்கள் பிள்ளைகள் அனைவரும் கூறும்போது நாங்கள் தினமும் பேருந்து மூலமாகதான் சென்று வருகின்றோம். இதற்கு முன் ஏதாவது பிரச்சனை என்றால் யாரிடம் சொல்வது, எப்படி கையாள்வது என்ற விவரங்கள் தெரியாமல் இருந்தோம். ஆனால் தற்போது சிங்கப்பெண் அதிரடிப்படையின் வாயிலாக எங்கள் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பேருந்துகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதன் மூலம் பெண்கள் எந்த பிரச்சனை வந்தாலும் தைரியமாக எதிர்கொள்வதுடன், பாதுகாப்பிற்காக அழைக்க வேண்டிய அவசர கால உதவி எண்கள், சேவைகள், குறித்து நாங்கள் அறிந்து கொண்டோம். எங்களைப் போன்ற மாணவியர்கள் மட்டுமல்லாமல் அனைத்து தரப்பு பெண்களுக்கும் தற்பொழுது வெளியே செல்லும் போது பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் செல்வது போல் உணர்கிறோம். பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக இத்திட்டத்தை அளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் அனைவரின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றோம் என தெரிவித்தனர்.

தொகுப்பு
அ.சுகுமார்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருப்பூர் மாவட்டம்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C,246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.